# தடுப்பூசி மருந்து போடுவதற்கான பதிவு செயல்திட்டத்தை தொடங்கியிருக்கும் துருக்கி



சென்னை, மார்ச்.16– சுற்றுலாத் துறை பணியாளர்களுக்காக கோவிட்-19 தொற்றுக்கான தடுப்பூசி போடுவதற்கு பதிவு செயல்திட்டத்தை தான் தொடங்கியிருப்பதாக துருக்கி அறிவித்திருக்கிறது. கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சகம், சுகாதாரத்துறை அமைச்சகம் மற்றும் துருக்கி சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு முகமை (TGA), ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்போடு இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது. விரைவில் வரவிருக்கும் சுற்றுலா சீசனுக்கு சர்வதேச சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கு "பாதுகாப்பான சுற்றுலா சான்றாக்கல் செயல்திட்டத்தின்" வரம்பெல்லைக்குள் இச்செயல்திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. சுற்றுலாத்துறை பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்வதே இதன் நோக்கமாகும். இதன் பணியாளர்களின் பாதுகாப்பே இதன் முதன்மை முன்னுரிமையாக தொடர்ந்து இருந்து வருகிறது.

கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் ஒத்துழைப்போடு, தடுப்பூசி மருந்து போடுவதற்காக தங்களது பணியாளர்களை சுற்றுலா சார்ந்த அமைவிடங்கள் பதிவு செய்துகொள்வதற்காக ஒரு செயல்தளத்தை சுகாதாரத்துறை அமைச்சகம் சமீபத்தில் அறிமுகம் செய்திருக்கிறது.

சுற்றுலா சார்ந்த பயண செயல்பாடுகள் மிக விரைவில் V-வடிவில் சரிவிலிருந்து மீண்டு, மீட்சிபெறும் என்று இந்நாடு எதிர்பார்ப்பதால், சுற்றுலாத்துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. முதலில், இப்பணியாளர்களுக்கு தடுப்பூசி மருந்து போடப்படும். 2021 ஆம் ஆண்டில் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சுற்றுலா அமைவிடமாக தனது தேசம் தொடர்ந்து இருப்பதை உறுதிசெய்ய துருக்கி அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சர்வதேச பயணிகளுக்கு பாதுகாப்பான பயண விருப்பத்தேர்வாக மக்கள் விரும்பி தேர்வு செய்யும் முதன்மை அமைவிடங்களுள் ஒன்றாக துருக்கி இருக்கும்.